**DEPOSITION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 49/2024**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-11/Lw-14 |
| Name | : | Mr. B.Senthilprabhu |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.10.2025.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் ஈரோடு வடக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 20.12.2023 ஆம் தேதி அன்று நல்லூர் காவல் நிலையத்தில் குற்ற பிரிவு காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது, நல்லூர் காவல் நிலைய குற்ற எண் 937/2023 படி இ.த.ச பிரிவுகள் 394, 397 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு எனக்கு முன்பிருந்த காவல் ஆய்வாளர் பகுதியாக விசாரணையை மேற்கொண்டு இருந்தார். அதன் பிறகு வழக்கு கோப்பை பெற்றுக் கொண்ட நான் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கில் காயம் அடைந்த கோமதிராணி

என்பவரை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு சாட்சிகள் சிவபெருமாள், ராஜசேகரன் மற்றும் காயச் சான்றிதழ் அளித்த மருத்துவர் அப்துல் முஹீதின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. மருத்துவர் அப்துல் முஹீதின் என்பவரை நான் விசாரணை மேற்கொண்டு போது அவர் இந்த சம்பவத்தினால் காயம் அடைந்த நபருக்கு சிகிச்சை அளித்த விவரங்களை தெரிவித்து அவருக்கு சம்பவத்தினால் ஏற்பட்ட காயங்களை பொறுத்து கொடுத்த காயச் சான்றிதழை என்னிடம் கொடுத்து இருந்தார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் காயச் சான்றிதழ் தான் அது. அ.சா.ஆ– 16. தினேஷ் குமாருக்கு காயச்சான்றிதழ் மருத்துவர் அப்போது என்னிடம் கொடுத்திருந்தார். ஆனால் அதை பொறுத்து அவருடைய கருத்துறை சொல்ல முடியாது என்று தெரிவித்துள்ளார் அந்த காய்ச்சான்றிதழ் அ.சா.ஆ– 17.

3. இரண்டு காயச் சான்றிதழ் அப்பொழுது மருத்துவர் என்னிடம் கொடுத்திருந்தார். தினேஷ் குமார் என்பவருக்கு காயச் சான்றிதழ் வழங்க முடியாது என்றும், கோமதி என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று தெரிவித்துள்ளார். மேற்படி தினேஷ்குமார் மற்றும் கோமதி ஆகியோருக்கு மருத்துவர் என்னிடம் கொடுத்த ஏ.ஆர்.என்ட்ரி தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்கள் அது அ.சா.ஆ– 18 மற்றும் 19. எனக்கு முன்பு வழக்கை விசாரணை செய்த புலன் விசாரணை அதிகாரி அடையாளம் அணிவகுப்பு நடத்த வேண்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு அடையாள அணிவகுப்பு நீதித்துறை நடுவரால் நடத்தப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அடையாள அணுகுப்பு அறிக்கை தான் அது அ.சா.ஆ– 20.

4. சம்பவத்தினால் காயமடைந்த கோமதி கோவை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு சென்றதாக மருத்துவர் என்னுடைய விசாரணையில் தெரிவித்து இருந்தார். கோவை மருத்துவமனையில் அவருக்கு கொடுத்த ஏ.ஆர்.என்ட்ரி என்னிடம் மருத்துவர் விசாரணையின் போது கொடுத்தார். தற்போது காண்பிக்கப்படும் ஆவணம் தான் அந்த ஏ.ஆர்.என்ட்ரி அது அ.சா.ஆ– 21.

5. எனக்கு முன்பு இருந்த புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கு சம்பந்தமான இருசக்கர வாகனம் Bajaj CT 100 பதிவு எண். TN39BS– 0856 என்ற வண்டியை

கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்து நீதிமன்றத்திற்கு படிவம் 91 மூலம் அனுப்பியுள்ளார். அதன்பிறகு அந்த வாகனம் நீதிமன்ற அனுமதியுடன் காவல் நிலைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. தற்சமயம் அந்த வாகனம் தற்போது எங்களுடைய காவல் நிலைய பொறுப்பில் உள்ளது.அதற்குரிய புகைப்படங்களை குறிப்பாணையுடன் தாக்கல் செய்துள்ளேன். 2 புகைப்படங்கள் அ.சா.ஆ–**22.** புகைப்படத்தில் உள்ள இருசக்கர Bajaj CT 100 பதிவு எண். TN39BS–0856 கொண்ட வாகனம் ச.பொ.**6**.

6. சிவபெருமாள் ராஜசேகர் ஆகியோரை அதன் பிறகு விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு விசாரணையை முடித்து எதிரி குற்றம் புரிந்துள்ளார் என்பது தெரிய வந்ததால் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 394, 397, 324, 326, 392 படி எதிரி செந்தில்குமார் (எ) சதீஸ் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. சாட்சிகள் கோமியும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் சம்பவத்தன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்கள் என்றால் சரி. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்துக் கொண்ட பிறகு அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் சிகிச்சையின் போது அவர்கள் எடுத்துக்கொண்ட நுண்கதிர் படங்களை சிடி ஸ்கேன் படங்கள் எதுவும் விசாரணையின் போது என்னிடமோ எனக்கு முன் விசாரணையும் மேற்கொண்ட புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரி.

2. மருத்துவ அறிக்கையின்படி கொடுங்காயம் என்ற விபரங்களை பொறுத்து நான் சாட்சியம் அளிக்க தகுதியான நபர் இல்லை என்றால் சரி. மருத்துவரை விசாரணை செய்த போது ஆயுதங்கள் ஏதேனும் காண்பித்து விசாரணை செய்தேனா என்றால் இல்லை. அதற்கு அவசியம் இல்லை. காயத்தின் தன்மைகளை பொறுத்து கருத்துரை பெறும் போது ஆயுதங்களை காண்பித்து மருத்துவரிடம் விசாரணையை மேற்கொண்டு இருக்க வேண்டும் என்றால் சரியல்ல.

3. அ.சா.3 சிவபெருமாள்,ச.பொ–6 வாகனத்தில் உரிமையாளர் இல்லை என்றால் சரி. வாகனங்கள் அவருடையது என்பதற்கு அ.சா.3 ஆவணங்கள் ஏதேனும் ஒப்படைத்தாரா என்றால் இல்லை. அ.சா. 4 என்னுடைய விசாரணையில் மேற்படி

வாகனத்தை வைத்திருந்ததாக ஆவணங்கள் ஒப்படைத்து தெரிவித்தாரா என்றால் இல்லை. அவர் விசாரணையில் வாகனத்தை சிவபெருமாளிடம் பத்தாயிரம் பணம் பெற்றுக்கொண்டு கொடுத்ததாக விசாரணையில் சொன்னார். அ.சா.4 வாகனத்தின் உரிமையாளர் இல்லை என்றால் சம்பவத்தன்று அவர் உரிமையாளர் இல்லை.

4. அதற்கு முன்பும் அவர் உரிமையாளர் இல்லை என்றால் சரி. பத்தாயிரம் பணம் பெற்றுக் கொண்டதற்கு ரசீதுகள் ஏதேனும் கைப்பற்றினீர்களா என்றால் இல்லை. Bajaj CT 100 பதிவு எண். TN39BS– 0856 உடைய உரிமையாளர் யார் என்று விசாரணையை மேற்கொண்டேனா என்றால் இல்லை. இன்றுவரை அந்த வாகனத்தின் உரிமையாளர் யார் என்று எங்களுக்கு தெரியாது என்றால் தவறு. பதிவு சான்றிதழின்படி அந்த வாகனம் சையது காசிம் என்பவருடையதாகும். அவரை வழக்கில் வாகனத்தை பொறுத்து விசாரணையை மேற்கொண்டேனா என்றால் இல்லை, அவசியம் ஏற்படவில்லை.

5. ச.பொ.6 படம் யார் எப்போது எடுத்தார்கள் என்பதற்கு உரிய சட்டபூர்வமான ஆவணங்களுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆவணம் சட்ட விதிகளுக்கு உட்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட பிறகு நீதிமன்றம் வாகனத்தை காவல் நிலைய பொறுப்பில் ஒப்படைத்துள்ளது. நீதிமன்றம் உத்தரவிடும் சமயத்தில் வாகனத்தை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கு தயாராக உள்ளோம். புகைப்படத்தில் தேதி இல்லை என்றால் சரி.

6. மேற்படி வாகனத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் தவறு. இந்த வாகனம் வழக்குக்கிற்காக உருவாக்கியுள்ளீர்கள் என்றால் தவறு. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் எதிரி கைது செய்து விசாரணைக்காக காவல் நிலையத்தில் இருந்த சமயத்தில் பார்த்து உள்ளார்கள். அதன் பிறகு தான் அடையாளம் நடந்துள்ளது என்றால் தவறு. அடையாள அணிவகுப்பு எதிரி கைது செய்யப்பட்டு 15 நாட்களுக்குள் நடைபெறவில்லை என்றால் 20.12.2023 ஆம் தேதி அடையாள அணுவப்பு நடந்துள்ளது. 15 நாட்களுக்குள் அடையாள அணிவகுப்பிற்கு அனுமதி கோரி எனக்கு முன்பு இருந்த ஆய்வாளர் முறையாக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து விட்டார்.

7. காலம் கடந்து எதிரியை அ.சா.1 மற்றும் அ.சா.2 ற்கும் நன்கு அடையாளம் காண்பித்து விட்டு, அதன் பிறகு அடையாளம் அணிவகுப்பு நடந்துள்ளதால் அந்த அடையாள அணிவகுப்பு செல்லாது என்றால் தவறு. வழக்குக்கும் எதிரிக்கும் எந்த

சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு எதிராக தவறான குற்ற அறிக்கையை தாக்கல் செய்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.10.30 16:09:36 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.